★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 28உ செவ்வாய் (10—4—56) ★ ★ வெளியூர்: பங்குனி 29உ புதன் (11—4—56) [இதழ் 255

வேடிக்கையும் — வேதனையும்!

திருவனந்தபுரம், ஏப். 8—

உயிரோடு இருக்கும்போது ஒருவர் வேலை கேட்டார்; ஆனால், அவர் மடிந்த பின்பு வேலைக்கு வருமாறு அவருக்கு உத்தரவு வந்ததாம்—வேடிக்கையாக மட்டுமல்ல—வேதனையாகவுமில்லையா?

1937-ம் ஆண்டில், கொல்லத்தைச் சேர்ந்த அனந்தராஜ ஷெனாய் என்பவர், பத்திரப் பதிவு இலாகாவில், ஒரு உத்தியோகம் கேட்டாராம்; ஆனால், அவர் 1948-ல் இறந்துபோனார். அதற்குப் பிறகு ஏழரை ஆண்டுகள் கழித்து, மாநில பொதுப் பணித் தேர்வுக்

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் சபையில்:

இந்தி தெரியாத உறுப்பினர்கள் படும் வேதனை

ஆங்கிலத்தில் பேசுமாறு மந்திரிகளுக்கு சபைத் தலைவர் கட்டளை

இந்தி வெறியர் தாண்டன் எதிர்ப்பு

புதுடெல்லி, ஏப். 10—

மக்கள் சபையில், இந்தி தெரியாத உறுப்பினர்கள் எத்தனை வேதனைப்படுகின்றனர் என்பதை சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், மந்திரிகளுக்குப் பிறப்பித்துள்ள கட்டளை ஒன்று தெளிவாகக் கூறுகிறது.

'இந்தியைத் திணிக்கமாட்டோம்; கட்டாயப்படுத்த மாட்டோம்' என்று கூறிவரும் டெல்லி ஆதிபத்தியவாதிகள், மக்கள் சபையில் இந்தியிலேயே பேசி வருகின்ற கொடுமை நிகழ்ந்தவண்ணமுள்ளது.

'இந்தியில் கேள்விகள் கேட்கப்பட்டால் அதற்கு இந்தியிலேயே பதில் தரலாம்' என்பது ஏற்கனவே அமுலாகி வரும் ஏற்பாடு.

ஆனால் உணவுத் துறை அமைச்சர், இலாகா பற்றிய விவாதத்திற்கு நேற்று பதிலளிக்கும்போது, இந்தியிலேயே பதிலளிக்கத் துவங்கியிருக்கிறார்.

உடனே சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் குறுக்கிட்டு, "உறுப்பினர்களின் கேள்விகளுக்கு வேண்டுமானால் மந்திரிகள் இந்தியில் பதில் கூறலாம்; ஆனால், விவாதங்களுக்குப் பதிலளிப்பது என்பது, சர்க்காரின் கொள்கைகளை விளக்குவதாகும்; எனவே, சர்க்காரின் கொள்கைகளைக் கொண்ட சொற்பொழிவை சபையில் உள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்; ஆகவே, ஆங்கிலத்திலேயே, மந்திரிகள் விவாதங்களுக்கு பதிலளிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத புருஷோத்தமதாஸ் தாண்டன் என்ற இந்தி வெறியர், "மந்திரிகள் இந்தியிலேயே பேசட்டும்; வேண்டுமானால் பேசுவதின் சாரத்தை ஆங்கிலத்தில் தரட்டும்" என்று கூறினாராம்!

ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர், "இங்கே என்ன நடக்கிறது என்பது எங்களுக்குப் புரியாது போனால், சபையில் எங்களுக்கு என்ன வேலை?" என்று கேட்டிருக்கிறார்.

சபைத் தலைவர், "இந்தியை தேசிய மொழியாக எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றாலும், மந்திரிகளின் அறிக்கைகளை சபையில் உள்ள அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று எடுத்துரைத்திருக்கிறார்.

"மந்திரிகள் இந்தியில் பேசினால், எதிர்க்கட்சியில் உள்ள பல இந்தி தெரியாதவர்கள் கஷ்டப்படுகிறார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பின்னர், மந்திரி ஜெயின், ஆங்கிலத்தில் பேசத் துவங்கினாராம்!

இந்தித் திணிப்புக் குழு அறிக்கை

மாநில சர்க்கார் கருத்தறியப்படுமாம்

ஆட்சி மொழிக் குழு தரும் அறிக்கை குறித்து, டில்லி சர்க்கார் ஒரு முடிவு மேற்கொள்ளு முன்பு, பல்வேறு மாநில சர்க்கார்களையும் கலந்தாலோசிப்பார்களாம்.

இந்தத் தகவலை, மக்கள் சபையில் பி. என். தத்தார் தெரிவித்திருக்கிறார்.

ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கை, முடிந்த சீக்கிரம் வெளியிடப்படும் என்றும், இதுவரை குழுவினர் இடைக்கால அறிக்கை எதும் தரவில்லை என்றும், வரும் ஜூலைத் திங்களில் குழுவினர் அறிக்கை தரக்கூடும் என்றும் அந்த மந்திரி கூறினாராம்.

டில்லியின் நேரடி ஆட்சி

இமாசலப் பிரதேசத்தில் கடும் எதிர்ப்பு

பெரும் கிளர்ச்சி எழுமென எதிர்க் கட்சியினர் எச்சரிக்கை

இமாசலப் பிரதேசத்தை டெல்லியின் நேரடி ஆட்சிக்கு உட்படுத்துவதை, எதிர்க் கட்சியினர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

அத்தகு ஒரு முயற்சிக்குப் பெரும் எதிர்ப்பு கிளப்பப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

"கமிஷனர் ஆட்சிக்கு இமாசலப் பிரதேசம் ஆளாவதை, நாங்கள் கிளர்ச்சி நடத்தி, ஆர்ப்பாட்டம்செய்து எதிர்ப்போம்,"

என்று, கிருஷ்ண நந்தினி என்ற எதிர்க் கட்சி உறுப்பினர், மாநில சட்டசபையில், மாநில புது அமைப்பு மசோதா விவாதத்திற்கு வந்தபோது குறிப்பிட்டிருக்கிறார்.

முழுப்பூசணியை சோற்றில் மறைக்க முயற்சி

வடவருக்கு வக்காலத்து வாங்கும் தென்னாட்டு எடுபிடி!

தொழில்துறையில் தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை?

சேலம், ஏப். 10—

கனரகத் தொழில்கள் நிறுவுவதில், டெல்லி சர்க்காரால் தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது — புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு நியாயமானதல்ல என்ற ஒரு முழுப் பொய்யை—கலப்பற்ற அப்பட்டமான பொய்யைத் துணிந்து கூறியிருக்கிறார், டெல்லி மந்திரி கே. சி. ரெட்டி—இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில்!

'வட இந்தியாவிற்கு அளவுக்கு அதிகமான ஆதரவு காட்டப்பட்டிருப்பதாகக் கூறுவதும் தவறு,' என்று முழுப் பூசணியை சோற்றில் மறைக்க முயற்சித்திருக்கிறார் அந்த மந்திரி!

டெல்லி சர்க்கார், சென்னை மாநிலம் தொழில் துறையில் முன்னேறுவதற்கு உதவ வேண்டுமென ஆவல் கொண்டிருப்பதாயும் அவர் பொய் பேசியிருக்கிறார்.

"சென்னை, தொழில் துறையில் முன்னேற உதவவேண்டும்" என்று டெல்லி ஆவல் கொள்ளும்போது, இதர மாநிலங்களையும் கவனிக்க வேண்டும் என்பதையும், நிதி நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை," என்றும் அந்த மந்திரி—தென்னாட்டுக்காரர்தான் — வடநாட்டவரின் எடுபிடியாகப் பணியாற்றும் நிலையில், வடநாட்டவருக்கு 'வக்காலத்து' வாங்கிக் கொண்டு பேசியிருக்கிறார்.

மாநிலப் புது அமைப்பு: முடிவுகளில் தவறிருக்கலாம்

'திருத்துவதற்கு மக்கள் அதிகாரம் படைத்தவர்களே!'

பண்டித நேரு கூறுகிறார்

"மாநிலப் புது அமைப்பு குறித்து, மேற்கொள்ளப் பட்டிருக்கும் முடிவுகளில் சில தவறானவையாக இருக்கலாம். சர்க்கார் தனது முடிவை மாற்றிக்கொள்ளுமாறு மக்கள் எப்போதும் தூண்டலாம்.

"நடைபெறுவது மக்கள் சர்க்கார். சர்க்காரை அடக்கி ஆள்வது மக்களே! இந்த நாட்டில் ஒன்றும் சர்வாதிகார ஆட்சி நிலவவில்லை; ஜனநாயக ஆட்சிதான் நிலவுகிறது; எனவே, ஏதாவது தவறுகள் நிகழுமானால் அவற்றை மக்கள் திருத்தலாம்—திருத்தவேண்டும்.

"மாநிலக் குழுவை சர்க்கார் நியமித்ததற்குக் காரணம், மக்கள் அதுபோல ஒரு குழு வேண்டுமெனக் கோரியதினால்தான்.

"குழுவின் சிபாரிசுகளில் பல எனக்கே பிடிக்கவில்லைதான்; உதாரணமாக, ஐதராபாத் மாநிலம் துண்டாடப்படுவதை நான் விரும்பவே இல்லை. ஆனால் மக்கள் அவ்வாறு விரும்பும்போது, சர்க்கார் அந்த விருப்பத்தை நிறைவேற்றத்தானே வேண்டும்?"

என்றெல்லாம் பண்டித நேரு பேசியிருக்கிறார், பீஜப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில்!

நில உடைமைக்கு வரம்பு ஏற்படும்

மத்திய சர்க்கார் விரைவில் முடிவு செய்யும்

"நில உடைமைக்கு வரம்பு கட்டுவது பற்றி விரைவிலேயே மத்திய சர்க்கார் ஒரு முடிவுக்கு வந்துவிடும்; இந்த முடிவைப் பின்பற்றி நடக்குமாறு மாநிலங்களுக்கும் யோசனை கூறப்படும்"

"நில உடைமைக்கு வரம்பு கட்டுவதை சிலர் எதிர்க்கிறார்கள்; ஆனால், இவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று முறையாக நிர்ணயிக்க வேண்டியது மிக்க அவசியமென்றே கருதுகிறேன்,"

என்று, மக்கள் சபையில் உணவு அமைச்சர் கூறியுள்ளார்.

உண்மை உருவம் பளிச்சென தெரிகிறது

பத்தாண்டுகளில் இந்தி பொது மொழியாக்கப்பட வேண்டுமாம்

இந்தியைக் கற்பது தேசியக் கடமையாம்

பண்டித நேரு, உண்மையைக் கக்குகிறார்

"இந்தியாவில் 12-க்கு மேலான முக்கியமான மொழிகள் உள்ளன; அவை எல்லாம், சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு, மதிக்கப்படுகின்றன. அவை எல்லாவற்றிற்கும், வளர்வதற்கு சமசந்தர்ப்பங்கள் தரப்பட்டிருக்கின்றன (!)

"ஒரு மொழி, பிறிதோர் மொழியை அழுத்திவிட்டு வளர வேண்டு மென்பதல்ல.

"இன்னும் பத்தாண்டுகளுக்குள், இந்தி, இந்தியாவின் பொதுமொழியாக கட்டாயம் ஆக்கப்பட வேண்டும். இந்தி கற்றுக் கொள்வது என்பது ஒரு தேசியக் கடமையாகும்.

"ஆனாலும், ஒருவர், இந்தியைக் கற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட முடியாது,"

என்று, பண்டித நேரு, பீஜப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1,20,00 000 ரூபாய் மதிப்புள்ள 2 00,000 மணங்கு திராட்சை உற்பத்தியாகிறது.

பிரிட்டனுக்கு ஏராளமான ரஷ்யத் தங்கம்

பிரிட்டனுக்கு, ரஷ்யப் பிரதமர் புல்கானினும், குருஷ்சேவும் வருகை தரும்போது, பெரும் அளவில் தங்கத்தைக் கடனாகத் தருவதற்கு முன்வரக்கூடுமென செய்திகள் கூறுகின்றன.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—4—'56 செவ்வாய்

கெஞ்சினல் மிஞ்சுவர்...!

சர்க்கார் ஊழியர்களும், ஆசிரியர்களும்தான் இன்றைய நிலையில், தமிழ் நாட்டில், மிகுந்த கஷ்டமான சூழ்நிலைகளில் வாழ்ந்து தீரவேண்டியவர்களாயிருக்கின்றனர் என்பது மிகையல்ல.

வேலையில்லை—அதனல் வாழ வழியில்லை; வறுமை வாட்டுகிறது; வேதனை கொல்லுகிறது; மக்கள் செத்துக்கொண்டிருக்கிருர்கள் — என்பது ஒருபுறமிருக்கட்டும். வேலையில்லாமல் வேதனைப்பட்டுச் சாவதைவிட, வேலை பார்ப்பதாகக் கூறிக்கொண்டு—அதுவும் கௌரவமும் பெருமையும் மிக்க பணிகளில் ஈடுபட்டிருப்பதாகக் கூறிக்கொண்டு, வாழவும் முடியாமல், சாகவும் தெரியாமல் தவிப்பது, அதிக அவலமானதல்லவா?

ஆசிரியர்களும் சரி, சர்க்கார் ஊழியர்களும் சரி, ஆண்டு தவருமல் மாநாடுகள்கூட்டி, தீர்மானங்கள் நிறைவேற்றி, மந்திரிமார்களிடம் 'மகஜர்'கள் தந்து, தங்கள் நிலை உயரப் பிரார்த்திக்கத் தவறியதில்லை. அதேபோல சர்க்காரும், 'பணமில்லை இப்போது; பிற்பாடு பார்க்கலாம்' என்று வழக்கமாக—இரப்பர் முத்திரை வாசகங்கள் போல, ஒரே பதிலைத் திரும்பத் திரும்பத் தரத் தயங்கியதும் இல்லை.

'பணம் இல்லை' என்ற பல்லவி, சர்க்கார் ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் வாழ்க்கை நிலையை உயர்த்தாமலிருப்பதற்குப் போதுமான—அல்லது, நியாயமான காரணமாகத் தெரியவில்லை.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு எத்தனை அத்தியாவசியமானது என்பதை ஒன்றுக்கு மேற்பட்ட விசாரணைக் குழுக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தும், அவர்களின் வருமானத்தை உயர்த்தித் தர, சர்க்கார் ஏனே, சம்மதிக்கக் காணேம்.

சர்க்கார் ஊழியர்களும் பல்லாண்டுகளாகத் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துக் கெஞ்சியும், கொஞ்சியும், அவற்றை நிறைவேற்றித் தருமாறு கேட்டு வருகின்றனர். சர்க்கார், பணமில்லை என்றே பதில் கூறிவருகிறது. ஒருவேளை, சர்க்கார் ஊழியர்கள் கெஞ்சுவதை விடுத்து, மிஞ்சினல்தான், சர்க்கார், பணிவார்களோ என்னவோ?

இன்றுள்ள நிலையில், சர்க்கார் ஊழியர்கள் படித்தவர்களாயிருந்தும், தங்கள் நிலையையும், சர்க்கார் நிலையையும் உணர்ந்தவர்களாயிருந்தும், ஏன் தங்கள் கோரிக்கைகளை ஈடேற்றிக்கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றனர் என்பதை, அவர்களே தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது குறித்து நாம் பின்போர் முறை ஆராய்வோம்.

டில்லி சர்க்காரின் பல்வேறு நிர்வாகப் பிரிவுகளிலும் பணிபுரிபவர்களுக்குக் கிடைக்கிற அடிப்படைச் சம்பளம், கிராக்கிப்படி இவற்றிற்கும், சென்னை சர்க்கார் ஊழியர்களின் சம்பளம், கிராக்கிப்படி இவற்றிற்கும் பெரும் வேறுபாடு இருப்பதைக் காண்கிருேம்.

ஒரு நகரத் தபால் அலுவலகத்தில், 'மணி ஆர்டர்' பதியும் குமாஸ்தாவாகப் பணி புரிபவருக்கும், அதே நகரத்தில், மாகாண சர்க்காரின் பிரதான நிர்வாக இலாகாவான ரெவினியூ இலாகாவில் குமாஸ்தாவாகப் பணி புரிபவருக்கும் கிடைக்கக் கூடிய மாதாந்திரச் சம்பள விகிதத்தில், சுமார் 40 ரூபாய் வரை வேறுபாடு இருப்பதைக் காண்கிருேம். இருவரும் ஒரே அளவு கல்வி யோக்கியதாம்சம் பெற்றவர்கள்தான் என்ருலும், பொதுவாக மாகாண சர்க்கார் இலாகாக்களில் பணிபுரிவோருக்கு திறமை சற்று கூடுதலாக இருக்கவேண்டும் என்பது, இரு சர்க்கார் நடைமுறைகளை அறிந்தவர்களுக்குத் தெரிந்த ஒன்ருகும். மேலும், மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கு வேலைப் பளுவும் அதிகம் என்ருலும், அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் என்னவோ, குறைவுதான். இருவரும், ஒரே தரமான வாழ்க்கையைப் பெறமுடியாத நிலையிருக்கிறது.

இந்த நிலை, உண்மையிலேயே மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கு அதிருப்தியைத் தருவது எதிர்பார்க்கக்கூடியதே! இந்த அதிருப்தி, நிர்வாகத் திறமைக்குறைவையும், சிற்சில இடங்களில் இலஞ்ச ஊழல்களையும் பிறப்பிக்கிறது என்பது வெளிப்படை.

எனவே, மாகாண சர்க்கார், நிர்வாகம் நேர்மையானதாகவும், திறமையானதாகவும் நடைபெற வேண்டுமென விரும்பினல், சர்க்கார் ஊழியர்களை என்றென்றைக்கும் அதிருப்திப்படுகிற சூழ்நிலையில் வைத்திருப்பது விவேகமானதல்ல.

அண்மையில் சர்க்கார் ஊழியர்கள் எல்லாம் துக்க நாள் ஒன்று கொண்டாடியிருக்கின்றனர். தங்கள் கோரிக்கைகளை சர்க்கார் ஈடேற்றவில்லை என்பதற்காகத் தாங்கள் வருந்துவதை எடுத்துக்காட்டும் முகத்தான், கருப்புச் சின்னம் அணிந்து ஓர் நாள் பணி புரிந்திருக்கின்றனர்.

இதைவிட அமைதியாக, நாகரீகமாகத் தங்கள் கோரிக்கைகளைப் படித்த கூட்டம் வலியுறுத்த முடியாது. ஊழியர்கள் கெஞ்சுகிருர்கள்; சர்க்கார், மிஞ்சக்கூடாது. மிஞ்சினல், சர்க்கார், ஊழியர்களிடம் கெஞ்ச வேண்டிய நிலை ஏற்படலாம்.

இந்திய-அமெரிக்க தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின் தொழில் துறை—தொழில் நுட்ப சேவைத் திட்டத்தின்கீழ் இந்திய வர்த்தக நிறுவனங்களுக்கு இதுவரையில் மொத்தம் 18 தொழில் நுட்ப நிபுணர்களின் சேவைகள் கிடைத்திருக்கின்றன.

கிலி கொண்டு கதறுகிருர் நேரு!

'ஒற்றுமை'யைக் காப்பீர் என ஓலம்

'மொழி வழிக் கிளர்ச்சி கூடாது' எனக் கண்டனம்

வழக்கமான பாணியில் உபதேசம் செய்கிருர்

மொழிவழியாக மாநிலங்களை அமைக்கவேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்துவோர்களை, மீண்டும் சாடியிருக்கிருர் இந்தியப் பிரதமர் நேரு!

மொழிவழிப் போராட்டத்தில் ஈடுபடுவது, தம் புண்களைத் தாமே குத்தி வருத்திக்கொள்வதாகும் என்று அவர் வர்ணித்திருக்கிருர்.

மொழிவழிக்கிளர்ச்சி, இந்தியாவை மேலும் துண்டாடி, ஒற்றுமையைக் குலைத்து, இறுதியாக, இந்தியாவே இல்லை என்ற நிலையைத்தான் கொண்டு வரும் என்று ஈனக் குரலில் ஓலமிட்டிருக்கிருர்!

"கடந்தகால 'சரித்திர'த்தை மீண்டும் நாம் நடத்திக்காட்ட வேண்டாம்; நாம் பிரிந்து சிதறுண்டுபோக வேண்டாம்; நம்மை அழித்துக்கொள்ள வேண்டாம்," என்று, புலம்பியிருக்கிருர்!

"சத்தியாக்கிரகம் அல்லது கிளர்ச்சி, மொழியின் பெயரால் நடைபெறுவது வெறுக்கத்தக்கதாகும். இது ஒரு குறிப்பிட்ட நிலையை அடையும்போது, நாட்டில் துன்பத்தை, துயரத்தைத்தான் கொண்டு வந்துசேர்க்கும்; எனவே, இத்தகு நடவடிக்கைகளை மக்கள் ஒரு குரலில் கண்டிக்க வேண்டும்;

"சில இடங்களில் நடைபெறும் சத்தியாக்கிரகம், ஒருகை, மற்ருெரு கையைத் தாக்கிக்கொள்வது போலாகும்;

"நாம் எல்லாம், ஒருடலின் பல பாகங்களாகும். ஒரு விரலில் காயம்பட்டாலும், உடல் முழுவதும்தான் வலி பரவும். இந்தியா—ஒருடல்; மாநிலங்கள் — உறுப்புகளாகும்;

"'சத்தியாக்கிரகம்' என்ருல் என்ன? எவரையாவது நிர்ப்பந்தம் செய்வதற்கா, சத்தியாக்கிரகம் என்று பெயர்? அல்ல; அது கண்டிக்க வேண்டிய ஒன்ருகும்."

என்று, கர்நாடகத்தில் நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் பண்டிதர் பேசியிருக்கிருர்.

"இந்தியா ஒரேநாடு; மொழி, மதம் இவற்றின் அடிப்படையில், எந்த ஒரு பிரிவினை சக்தியையும் நாம் அனுமதிக்க முடியாது"

என்று கூறி, தன் ஆத்திரத்தைக் கக்கியிருக்கிருர்.

"பிரிவினை சக்திகளினல்தான் கடந்த காலத்தில் இந்தியர்கள் வீழ்ச்சியுற்ருர்கள்; அது நம்முடைய பலவீனத்திற்குக் காரணமாயிருந்திருக்கிறது.

'உங்களுக்கென ஒரு மாநிலம்—கர்நாடகம் அமைந்து விட்டது என்ற மகிழ்ச்சியில், இந்தியாவின் 'தேசிய ஒற்றுமை'யை மறந்து விடாதீர்கள்; அலட்சியப்படுத்தி விடாதீர்கள்,"

என்று, ஓலமிட்டிருக்கிருர், கிலி கொண்டு கதறி யிருக்கிருர் நேரு பெருமான்!

நாடகம் நாட்டைக் கெடுக்குமா?

உ. பி. கிராம மக்கள் தரும் பதில்

'நாடகம், நாட்டைக் கெடுத்து விடும்; சினிமா, ஒழுக்கங் கெடுக்கும் சீர்குலைவுச் சாதனம்' என்று சிலர் பேசுகின்றனரல்லவா? அவர்களுக்கு நடைமுறைச் சம்பவங்கள் சில, நல்ல பாடம் தருவனவாய் அமைகின்றன.

நாடகம், தொன்றுதொட்டே, மக்களிடத்தில் தொடர்புகொள்ள அரும்வாய்ப்பாக இருந்துவருவதாகும். அதேபோலத்தான் சினிமாவும், சில காலமாக!

நாடகமும், சினிமாவும் கலை நிகழ்ச்சிகள் என்ருலும், அவை மக்களுக்கு நல்லன—தீயனவற்றை விளக்கிக் காட்ட பயன்படக்கூடியனவென்பதை, கேலி பேசுவோர் மறந்துவிடுகிருர்கள்.

அம்மைக் குத்திக்கொள்ள மறுக்கிருர்கள் ஒரு கிராம மக்கள்—அறியாமையினல், 'அம்மை நோய் காளியம்மனின் திருவிளையாடல்; மாரியாத்தாளின் கோபம் என்றெண்ணிக் கிடக்கிருர்கள்; அவர்களிடத்தில் அம்மை குத்திக்கொள்ளுமாறு சர்க்கார் அதிகாரிகள் கூறுகின்றனர்; மறுத்துவிட்டு, காளி பூசையில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையை மாற்றி, கிராம மக்களை; குழந்தைகளுக்கு அம்மை வராமல் பாதுகாக்க ஊசிபோட்டுக் கொள்ளுமாறு தூண்டுவதற்கு நாடகம் பயன்பட்டது என்பதாக செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது

உ. பி. மாநிலத்தில் பாராபங்கி மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றில், மக்கள், அம்மை ஊசி போட்டுக் கொள்ள மறுத்துவிட்டு, காளிக்கு காணிக்கை தர முற்பட்டிருக்கின்றனர்.

உடனே சர்க்கார் அதிகாரிகள் நாடகம் ஒன்று தயாரித்திருக்கின்றனர்.

ஒரு விதவை, தன் ஒரே மகனை, அம்மை வராது காத்துக் கொள்ள ஆண்டவனை நம்புகிருள். ஊசி போட்டுக் கொள்ள மறுத்துவிட்டு, 'ஆண்டவனை பஜித்தாலே போதும்' என்று வாளாவிருந்துவிட்ட அவள், தன் குழந்தையைக் காப்பாற்ற முடியாது போய் விடுகிருள்; ஆனல், அவளது அண்டை வீட்டுக்காரர் 'பக்திமான்' என்ருலும், குழந்தைக்கு ஊசி போட்டுக்கொண்டு அம்மை வராது தடுத்துக் கொண்டு குழந்தையைக் காப்பாற்றுகிருள். இப்படி அமைந்திருந்ததாம் நாடகக்கதை; சர்க்கார் ஊழியர்களே நடித்துக் காட்டியிருக்கின்றனர். இது கண்ட கிராம மக்கள், பின்னர், தங்கள் குழந்தைகளுக்கு அம்மை குத்திக் கொள்கிருர்கள். சர்க்கார் நோக்கம் வெற்றி பெறுகிறது — என்ற செய்தி, 'நாடகம் நாட்டைக் கெடுக்கும்' என்று பேசுகிறவர்களுக்குத் தகுந்த பதிலாக இல்லையா?

நாடகத்தால் நாட்டைக் கெடுக்கவும் முடியும்; அது, பயன்படுத்துபவர்களைப் பொறுத்ததே தவிர நாடகத்தின் குறையல்லவே

வெள்ள நிவாரணமளிப்பதில் இலஞ்ச ஊழல்

பஞ்சாப் மாநிலத்தில் வீட்டுக்கு வீடு விசாரணை

நிவாரண வேலையில் ஈடுபடுவோருக்கு எச்சரிக்கை?

பஞ்சாப் மாநில ஆட்சி காங்கிரசார் கையில்தான் இருக்கிறது. அங்கு ஊழல் வளர்ந்த வண்ணமிருப்பதை எப்படித்தான் வர்ணிப்பது என்று தெரியவில்லை.

அந்த மாநில நிர்வாகத்தில் ஊழல் இல்லாத துறையே தெரியக் காணேம்.

வெள்ளம் பெருக்கெடுத்தது; மக்கள் அவதியுற்ருர்கள்; வரிப்பணம், அள்ளி அள்ளித் தரப்பட்டது; மாநில சர்க்காரால் மட்டுமல்ல—பெரும் பகுதி மத்திய சர்க்காரால்!

நிவாரணம் என்று, கடனும்—மானியமும் மக்களுக்கு அளித்தது, சர்க்கார்.

ஆனல் இந்த நிவாரணத்தை மக்களுக்கு அளிப்பதில், பெரும் ஊழல் நடைபெற்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இப்போது வீடு வீடாகச்சென்று, சர்க்கார் துப்பறியும் இலாகா அதிகாரிகள், இலஞ்ச ஊழல், புகார்கள் பற்றி விசாரணை நடத்தி வருகின்றனராம்.

போலீசாரில் ஒரு அளவினர் இதற்கென்றே ஒதுக்கப்பட்டு புலன் விசாரணை நடைபெறுகிறதாம்.

15 நாட்களுக்குள்ளாக, 215 - இலஞ்சக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும், ரூ. 20 ஆயிரம்வரை, அந்தக் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாயும், சுமார் 28 சர்க்கார் ஊழியர்கள், ரெவினியூ இலாகாவைச் சேர்ந்தவர்கள் இதில் தொடர்பு கொண்டவர்கள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தக் குற்றங்கள், நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படாதென்றும், விரைவில் 'பைசல்' காணும் பொருட்டு, இலாகா பூர்வமாகவே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், உடனடியாக இந்த 28 அதிகாரிகளும் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது

சென்னை மாநிலத்தில் புயல், வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருக்கும் சர்க்கார் ஊழியர்கள் இந்த நடவடிக்கைகளைத் தங்களுக்கு ஒரு எச்சரிக்கையாக கொள்வது நல்லதெனக் கருதப்படுகிறது.

30,000 ஆண்டுக்கு முன் வாழ்ந்த மனிதன்

30 அல்லது 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனைப் பற்றிய சில தகவல்கள் தக்க சான்றுகளுடன், மைசூர் மாநிலத்தில், பாண சங்கிரமலைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். ஆதிகால மனிதன் பயன்படுத்திய கற்களாலான சில கருவிகள் ஆகியன இங்கு தென்படுவதால், இந்த இடத்தை விரிவாகப் பரிசீலனை செய்ய ஏற்பாடாகியுள்ளதாம்.

இலங்கைக்கு பிரிட்டிஷ் நூல்கள் நன்கொடை

சமயம், தத்துவம், மனித இயல், சிற்பசாத்திரம், தொல்பொருள் ஆராய்ச்சி, சித்திரம் ஆகிய பல துறைகளைச் சேர்ந்த 2,500 நூல்களை, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் நூற்காப்பாளர் டாக்டர் இ. ஜே. தாமஸ், இலங்கை பல்கலைக் கழகத்திற்கு நன்கொடையாகத் தந்திருக்கிருர். இவை 43 மொழிகளில் உள்ளன. டாக்டர் தாமஸ், ஆசிய நாட்டு மொழிகளிலும், கலைகளிலும் நல்ல அறிவுடையவர்.

சோவியத் கடற் படைத் தளபதி

பதவியிலிருந்து விலக்கப்படுகிருர்

காரணம் கூறப்படவில்லை

மாஸ்கோ, எப். 8—

சோவியத் ரஷ்யாவின் கடற்படைத் தளபதியான நிகோலாய்ஜி குஜ்னெட்சாவ் என்பார் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக அவரது இடத்தில், அவரது துணை அதிகாரியாகவிருந்த எஸ். ஜி. கார்ஜ் ஸ்காவ் என்பார் நியமிக்கப்பட்டிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்துத் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

நீக்கப்பட்ட தளபதி முதல் உலக யுத்தத்திற்கு முன்பே, ஆச்சரியப்படத்தக்க இளம் வயதிலேயே—அதவாது 37 வயதிலேயே—சோவியத் கடற்படையின் தளபதியானவராம்.

ஆனுல், அவர் அண்மையில் நடைபெற்ற கம்யூனிஸ்டுக் கட்சி மாநாட்டில், கட்சியின் உயர்தரக் குழுவான மத்தியக் குழுவில் இடம் பெருது போய்விட்டாராம். 1952ல், ஸ்டாலின் மரணத்திற்குச் சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற கட்சியின் 19-வது காங்கிரசில் மத்தியக் குழுவிற்கு இவர் நியமிக்கப்பட்டிருந்தாராம்.

1950-ல் ரஷ்யாவில் மிக உயர்ந்த பதக்கமான லெனின் பதக்கம் இவருக்குத் தரப்பட்டிருந்ததாம்.

'மாஸ்கோ மாற்றங்கள் ஒத்துழைக்க போதுமானவையல்ல'

அகில உலக சோஷலிஸ்டுகள் முடிவு

'அகில உலக சோஷலிஸ்டுகள்,' கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுச்சேர இயலாது என்று அறிவித்துள்ளனர் எனத் தெரிகிறது.

'மாஸ்கோவில் மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும், சோவியத் கம்யூனிஸ்டுகளுடன், மேற்கத்திய சோஷலிஸ்டுகள் நெருக்கிய தொடர்பு கொள்வதற்கில்லை', என்று அவர்கள் கூறிவருகின்றனர்.

கனடா, மற்றும் ஒன்பது ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சோஷலிஸ்டுகளின் கூட்டம் லண்டனில் நடைபெற்றபோது இந்த அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது.

"சோஷலிசமும், கம்யூனிசமும், பொதுப்படையான அம்சங்கள் எவற்றையும் கொண்டவையல்ல. சோஷலிசம் என்ற இலட்சியத்தையே கம்யூனிஸ்டுகள் திரித்துவிட்டனர். நாங்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்; அவர்கள் அப்படி அல்ல. தனி மனித உரிமைகளை நாங்கள் நம்புகிருேம்; அவர்கள் கேலி பேசுகின்றனர். ஸ்டாலினிசத்தைத் தூற்றுவதினுல்—மறுப்பதினுல் இந்த நிலை மாறக் காணுேம்.

"எனவே, சர்வதேச சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகளுடன் ஐக்கிய முன்னணி என்பது போன்றவற்றை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதுடன், அவர்களுடன் எந்த வகையிலும் ஒத்துழைக்க — கூட்டுறவுகொள்ளக்கூடாது என்றும் கருதுவதோடு, தகராறுகளுக்கு, சமாதான முறையில் முடிவு காண விரும்பும் சர்க்காரோடு ஒத்துழைப்பதை வரவேற்கவும் செய்கிருேம்.

"எங்கெல்லாம் கம்யூனிஸ்டுகள் ஆட்சிப் பொறுப்பிலிருக்கிருர்களோ அங்கெல்லாம், எல்லா வகையான சுதந்திரத்தையும் மட்டந்தட்டி விட்டார்கள்; சோஷலிஸ்டுகள் பல தலைமுறைகளாகப் போராடி வெற்றிபெற்றுள்ள தொழிலாளர்களின் சகல உரிமைகளையும், எல்லா அரசியல் பலன்களையும், பறிமுதல் செய்துவிட்டார்கள்"

என்று, கூட்ட இறுதியில் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூறியிருக்கிருர்கள் என்றும் தெரிகிறது.

உலகத்திலேயே அதிக வெப்பமுள்ள உலை

வாஷிங்டன், எப், 9—

உலகத்திலேயே வெப்பமுள்ள உலையை இயக்கச்செய்ய வெய்யிலைப் பயன் படுத்தப்போவதாக அமெரிக்க விமானப்படை தெரிவித்துள்ளது.

காற்று தெளிவாகவும், நிறையவும் இருக்கும் நியூ மெக்சிகோவிலுள்ள சாக்ரமென்டோ மலைத் தொடரில், உயரத்திலுள்ள ஒரு இடத்தில், சூரிய வெப்பம் ஒன்று சேர வசதியளிக்கும் கண்ணுடிகளைக் கொண்ட ஒரு திட்டம் மூலம் இது நடத்தப்படும்.

7,000 முதல் 8,000 டிகிரி பாரன்ஹீட், 4,400 டிகிரி சென்டிகிரேட் வெப்பம் அடையக்கூடிய இந்த உலை ஆராய்ச்சிக்காக உபயோகிக்கப்படும்.

'சமதர்ம அரசை நிர்மாணித்த மனிதர்'

ஸ்டாலினுக்கு இத்தாலியக் கம்யூனிஸ்டுத் தலைவர் புகழ்மாலை

"தவறுகள் செய்திருப்பதாகக் கொள்வதானுலும் கூட, சமதர்ம அரசை உறுதியாக நிறுவிய மனிதர் ஸ்டாலின்தான் என்பதை நாங்கள் ஒப்புகிருேம்."

"வெற்றிப் போரைக் கண்ட எதிர்ப்பாற்றல் படைத்த மனிதர் ஸ்டாலினேயாவார்."

இவ்வாறு இத்தாலி கம்யூனிஸ்டு கட்சிப் பொதுச்செயலாளர் சினுர் பி. டோக்லியாட்டி, மனிதகுல மாமேதை ஸ்டாலின் பற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார்.

'பிராவிடண்ட்' நிதி சட்டம் பரவலாகும்?

தோட்டத் தொழிலாளர் பிரச்சினை: சர்க்கார் அக்கரை?

'பிராவிடண்ட்' நிதி சட்டத்தை, 50 பேர்களுக்கு மேல் பணியாற்றும் தேயிலை, இரப்பர், ஏலக்காய், காப்பி, மிளகு தோட்டங்களுக்கு பரவலாக்குவது பற்றி இந்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதுபற்றி தோட்ட முதலாளிகளின் கருத்தைத் தெரிந்து கொள்ள முயற்சிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில், 50 பேருக்கு மேல் பணியாற்றும் 1,121 தேயிலைத் தோட்டங்களும், 71 இரப்பர் தோட்டங்களும், 9 ஏலக்காய்த் தோட்டங்களும், 247 காப்பித் தோட்டங்களும் (குடகு, சென்னை, மைசூர் மாநிலங்களில் இருக்கின்றன) ஒரு மிளகுத் தோட்டமும் இருக்கின்றன.

'பிராவிடண்ட்' நிதி சட்டம் இத்தோட்டங்களுக்கு பரவலாக்கப்பட்டால் 6,86,000 தொழிலாளர்கள் இதில் சேரக்கூடும்.

இஸ்ஸாத் நகரிலுள்ள (உத்தரப் பிரதேசம்) இரயில்வே மராமத்துப் பட்டறை சுமார் 1,86,00,000 செலவில் மாற்றியமைக்கப்படவிருக்கிறது.

****

திராவிட வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

★ திராவிடம் வளம் பெறவும்
★ திராவிடர் நலம் பெறவும்
★ அதற்கான திட்டம் தீட்டி செயல்படுத்தவும்

மே 17, 18, 19, 20 தேதிகளில்

திருச்சி

பந்தயத் திடலில்

('ரேஸ் கோர்ஸ்' ஜமால் முகம்மது கல்லூரி அருகில்)

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

நடைபெறும்

★

பொதுச் செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்
நாட்டு விடுதலை குறித்து நல்லுரை ஆற்றுவர்

★

எழுச்சியூட்டும் நாடகங்கள்—இன்னிசை விருந்து—
ஓவியக் காட்சி ஆகிய சிறப்புகளும் உண்டு

★

திரண்டு வாரீர் தோழர்களே!

—வரவேற்புக் குழு

****

எஸ். ஆர். யூ. பொன்மலை கிளை அமைப்புக் கூட்டம்

2—4—56 திங்கள் மாலை 6-மணியளவில், பொன்மலைப்பட்டி தோழர் மைக்கல் அவர்கள் இல்லத்தில், எஸ். ஆர். யூ. பொதுச் செயலாளர் தோழர் பொன் - பரமசிவம் தலைமையில், எஸ். ஆர். யூ பொன்மலை கிளை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் ஏராளமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

தோழர்கள் பாராங்குசம், கிருஷ்ணமூர்த்தி, முத்துகிருஷ்ணன் ஆகியோர், எஸ். ஆர். யூ-வின் நோக்கங்களையும், சமீபத்தில் நடைபெற இருக்கும், 'எம்ப்ளாயீஸ் யூனியன்'—எஸ். ஆர். யூ இணைப்பு பேச்சுவார்த்தை பற்றியும் பேசினர்.

பின்னர், 21 பேர்கள் கொண்ட அமைப்புக் குழு நியமிக்கப்பட்டது.

தோழர்கள் எல். கிருஷ்ணமூர்த்தி, என். முத்துகிருஷ்ணன் ஆகியோர் கமிட்டிக்குக் கன்வீனர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டம் இனிது 7-30 மணிக்கு முடிவுற்றது.

ஆசிரியருக்குக் கடிதம்

குடிசைகளைப் பிரிக்கும் போக்கு!

ஆசிரியர்: 'நம் நாடு'

ஐயா,

24—3—56 அன்று சென்னை சி. ஐ. டி. நகரில் நடந்த பொதுக் கூட்டமொன்றில், த. நா. கா. க தலைவர் கக்கன், நகரசபை உறுப்பினர் ஆதிமூலம், தொகுதி நகர உறுப்பினர் கே. எம். சுப்பிரமணியம் கீழ்க்கண்டவாறு பேசினர்:—

"இந்தப் பகுதியிலுள்ள குடிசைகளைப் பிரிக்கும்படி, நகர அபிவிருத்தி டிரஸ்ட் போர்டாரிடமிருந்து அறிவிப்பு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டோம். அப்படி ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை. ஒருவேளை அப்படி ஏதாவது நடந்தால் எங்களில் யாரிடமாவது வந்தால் நாங்கள் பார்த்துக் கொள்கிருேம். மேலும், அப்படி நிச்சயமாக நடக்காது என்றும் நாங்கள் நம்புகிருேம்," என்று பேசியதுடன், தொகுதி கவுன்சிலர் தோழர் சுப்பிரமணியம், 50-வது வட்ட நகரசபை உறுப்பினர் ஆதிமூலம் பேசியபோது, 'நாங்கள், மேற்படி டிரஸ்ட் போர்டில் உறுப்பினர்களாக இருக்கிருேம். எவ்வகையிலும் அப்படி நடக்க நாங்கள் அனுமதிக்கமாட்டோம். அதோடு, இங்கிருப்பவர்களை இப்படியே நிரந்தரமாக இருக்க எல்லாவித முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்ளுவோம்' என்று உறுதி கூறினர்.

ஆனுல், நடந்ததென்ன?

மறுநாளே (25-3-56) டிரஸ்ட் போர்டிலிருந்து ஆட்கள் வந்து 5, 6 குடிசைகளைப் பிரித்துவிட்டார்கள். இதுகுறித்து, அன்று பேசிய நகரசபை உறுப்பினர்களைக் கண்டு கேட்டதற்கு, 'அவர்கள் நகர அபிவிருத்தி சட்டப்படி செய்கிருர்கள்; நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை' என்று சொல்லிவிட்டனர். பிறகு, 1—4—56 அன்று பாதிக்கப்பட்ட—படும் மக்கள் ஊர்வலமாக தங்கள் வேதனையைக் கூற, திரு. கக்கனிடம் சென்ருர்கள். அவர், முதலமைச்சரிடம் அவர்களை அழைத்துச் சென்ருர்; முதலமைச்சர், 'ஆகட்டும், பார்க்கலாம்,' என்று தனது வழக்கமான பதிலைத் தந்தார். ஆனுல், 2—4—56 அன்று தாய்மார்கள் சமையல் செய்திருந்ததையும் பொருட்படுத்தாமல், மேற்படி போர்டின் ஆட்கள், போலீஸ் உதவியுடன், மேலும் சில குடிசைகளைப் பிரித்துவிட்டனர். இப்படி அங்குள்ள சுமார் 75 குடிசைகளும் பிரிக்கப்படுமாம்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கடந்த நகரசபைத் தேர்தலின்போது அறிக்கை வெளியிட்ட திரு. கே. எம். சுப்பிரமணியம் என்ன செய்யப் போகிருரோ தெரியவில்லை.

'மக்கள் நலம் நாடுவோன்'
சென்னை.

கணக்கெடுக்கும் பணி

நகரில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைச் சேகரிக்கும் வேலையில் நகரசபைப் பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்து ஈடுபடவேண்டும் என்று, சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத்தெரிய வருகிறது.

லெப்பைக்குடிக்காடு ஆரம்ப ஆசிரியர்கள் சங்க முதலாண்டு விழா

30—3—56 காலை 9 மணியளவில், மேற்படி சங்க முதலாண்டு விழா, நியூசக்தி டாக்கிசில் தோழர் என். இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் ஏ. இராமசாமி, அழகப்பபடையாச்சி, தங்கவேலர் ஆகியோர் பேசினர்.

இறுதியாக தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ஆசிரியர்களின் நிலை குறித்தும், அவர்களின் பொறுப்பு வாய்ந்த பணியினைக் குறித்தும் விளக்கி அரியதோர் கருத்துரை நிகழ்த்தினுர்.

பிரிவுபசாரக் கூட்டம்

7—4—56 மாலை 5 மணிக்கு திண்டுக்கல் செயின்ட் மேரீஸ் வீதியில், 'திண்டுக்கல் முனிசிபல் எம்ப்ளாயீஸ் யூனியன்' சார்பில், திண்டுக்கல்லிலிருந்து மாற்றலாகிப் போகும் கமிஷனர் ஏ. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. மாலை 6½ மணிக்கு திண்டுக்கல் நகராட்சி சேர்மன் ஜனுப் கே. எம். முகம்மது அப்துல்காதர் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. கமிஷனர் அவர்களின் சேவைகளைப் பாராட்டிப் பலர் பேசினர்.

திருமணங்கள்

2—3—56ல், கருகம்புத்தூர் எம். காந்தி என்ற தோழர் இராமசாமி—தோழியர் கே. பத்மாவதி திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 கிளைக் கழகச் செயலாளர் தோழர் கே. கே. நடேசன் அவர்கள் மூலமாக வரப்பெற்ருேம் — நன்றி — பொறுப்பாளர்.

* * *

25-3-56 காலை 10 மணியளவில், திருமங்கலத்தில், தோழர் தர்மராசன்—தோழியர் சரோசா திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துக்களும் வந்தன. இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

25—3—56 இரவு 7 மணியளவில், தலைஞாயர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. வைரக்கண்ணு தலைமையில், தோழர் ஏ. சண்முகம்—தோழியர் சுந்தராம்பாள் திருத்திய திருமணம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஏ. இரசாக், வீராசாமி, பண்டரிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்ருேம் — நன்றி — பொறுப்பாளர்.

* * *

தாத்தையங்கார் பேட்டையை அடுத்த பின்னாத்துறையில், 29-3-56-ல், தோழர் நமசிவாயம்—தோழியர் தனபாக்கியம் திருமணம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இது நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

அரிசி, பண்டங்கள் விலை ஏற்றம்

தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

அரிசி, மற்றும் இதர பண்டங்களின் விலை, வெகுவாக ஏறியிருப்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, விலை ஏற்றத்தைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த ராஜ்கோட் நகர மக்களடங்கிய கூட்டம் ஒன்றில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது.

விலைவாசிகள் ஏற்றத்தால், நடுத்தர, ஏழை மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் நிலைமை படுமோசமாகிவிடக்கூடும் என்றும் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

"வியாபாரிகளும், சில விவசாயிகளும் கூட, உணவுப் பண்டங்களுக்கு சிறிது நாள் கழித்தால் கூடுதலான விலை கிடைக்கும் என்று எண்ணி, அவற்றைப் பதுக்கி வைத்திருப்பதினால்தான் இந்த நிலை—விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது,"

என்று, கூட்டத்தில் பேசப்பட்டிருக்கிறது.

சர்க்கார் வேலைக்கு நபர்கள்

தேர்ந்தெடுப்பதில் ஒழுங்கீனம்

பொதுப் பணித் தேர்வுக்குழு அறிக்கை

சர்க்கார் உத்தியோகங்களுக்கு நபர்களைத் தேர்ந்தெடுப்பதில், ஒழுங்கீனமான முறைகள் கையாளப்பட்டிருப்பதாக மைசூர் மாநில பொதுப் பணித் தேர்வுக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

பொதுப் பணித் தேர்வுக் குழுவைக் கேட்காமலேயே, சர்க்காரில், கெஜட் பதிவுபெறும் உத்தியோகத்திற்கு நபர்கள் பொறுக்கப்படுகின்றனராம்.

பெங்களூரில் உள்ள ஒரு தொழில் கல்விக் கழகத் தலையாய (பிரின்சிபால்)ராக நியமிப்பதற்கு, பொதுப்பணித் தேர்வுக் குழு ஒருவரை சிபாரிசு செய்ததாம்; ஆனால், சர்க்காரோ, அந்த நபரை நியமிக்காதது மட்டுமின்றி, வேறொருவரை நியமித்தார்களாம்.

இந்தத் தகவலைக் கூறியுள்ள குழுவின் அறிக்கை, இதுமாதிரி ஊழியத்திற்கு நபர்கள் பொறுக்கும் வேலையில், எத்தனை ஒழுங்கீனங்கள் நடைபெற்று வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

நிலக்கொடை இயக்கம்

43,05,544 ஏக்கர் நிலம் கிடைத்துள்ளதாம்

நிலக்கொடையாக இந்தியா முழுமையிலும், 1956 மார்ச் 31-ந் தேதி வரையில், 43,05,544 ஏக்கர் நிலம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியா முழுமையிலும் நிலமற்ற 74,344 குடும்பங்களுக்கு 3,70,355 ஏக்கர் நிலம் விநியோகிக்கப்பட்டுள்ளதாம்.

வேடிக்கையும்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர், அவர், அந்த இலாகாவில் வேலை பார்க்க விரும்பினால், ஒரு வாரத்திற்குள் வேலையை ஒப்புக்கொள்ளுமாறு கடந்த வெள்ளிக்கிழமையன்று உத்திரவு அனுப்பினார்களாம்.

பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, கேட்ட வேலை கிடைத்தது என்றாலும், வேலை கேட்டவர் உயிரோடு இருக்கவில்லை—அதனை மேற்கொள்ள!

'எதிர்பாராத நிலைமை' ஏற்படக்கூடுமாம்!

அரிசியும், கோதுமையும் கையிருப்பில் இருக்குமாம்

வெளிநாடுகளிலிருந்தே இவைகள் இறக்குமதி செய்யப்படுமாம்

புதுடில்லி, ஏப் 9—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், உணவுப் பொருள்களின் தேவை அதிகமாகலாம்; அல்லது திடீரென எதிர்பாராத நிலைமை ஏதாவது ஏற்படலாம்; இதைச் சமாளிப்பதற்காக பத்து இலட்சம் டன் அரிசியும், பத்து இலட்சம் டன் கோதுமையும் சர்க்கார் கையிருப்பில் வைத்திருக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது,"

என்று, மக்கள் சபையில், உணவு இலாகா அமைச்சர் கூறிவிட்டு, மேலும் சொன்னார்:

"உணவுப் பொருள்களின் விலைவாசிகள் ஒரு வரம்புக்குள் இருப்பதற்கும் இந்தக் கையிருப்பு உதவி செய்யும். இந்த அரிசியையும், கோதுமையையும், சர்க்கார் உள்நாட்டில் வாங்கமாட்டார்கள்; வெளிநாடுகளிலிருந்தே இவைகள் இறக்குமதி செய்யப்படும்.

"அமெரிக்காவிலிருந்து கோதுமை வாங்குவதில் சில சங்கடங்கள் உள்ளன" என்று கூறிவிட்டு, அமைச்சர் அரிசி சம்மந்தப்பட்ட வரையில் பர்மாவிலிருந்து இறக்குமதி செய்வதற்குப் பூர்வாங்கமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிட்டார்.

கொள்ளைக்காரர்கள்

போலீஸ்காரர்களான விந்தை!

கொள்ளைக்காரர்கள்— சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள் சுமார் 24 பேர் போலீஸ் இலாகாவில் சேர்ந்து, பணிபுரிந்தனராம்.

பெப்சு மாநிலத்தில்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது.

மாநில சட்டசபையில் முதன் மந்திரி பிரிஷ் பன் என்பார் தகவல் தந்திருக்கிறார்.

போலீஸ் உடையிலிருந்த அந்த மாஜி குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டதும் வேலையிலிருந்து நீக்கப்பட்டனராம்.

இது பற்றி இலாகாபூர்வமான விசாரணை ஒன்று நடத்தப்பட்டதின் விளைவாக 100 போலீசார் வரையில், பதவிக்குறைப்புக்கு ஆளாக்கப்படுதல், வேலையிலிருந்து நீக்கப்பெறுதல் ஆகிய தண்டனைகள் தரப்பட்டனர் என்றும் முதன் மந்திரி கூறியிருக்கிறார்.

★★★-★★★★-★★★★★★★★★★

கழகத் தோழர்களுக்கு:

உறுப்பினராகச் சேர்ந்துள்ளவர்களுக்குரிய உரிமைச் சீட்டு, மே திங்கள் 1-வது வாரத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

—தலைமை நிலையம்
தி. மு. கழகம்.

★★★★★★★★★-★★★★-★★★

உ. பி. நகரங்களில் கடையடைப்பு

ஒருவார காலம் நீடித்தபின் முடிவுற்றது

லக்னோ, ஏப். 9—

லக்னோ, கான்பூர், நகரங்களில் கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்றுவந்த அர்த்தால் இன்றுடன் முடிந்துவிட்டது என்று தெரிகிறது.

விற்பனை வரி விதிப்பு குறித்து கவர்னர் பிறப்பித்த புதிய உத்தரவு ஒன்றை எதிர்த்து வியாபாரிகள் இந்த நீடித்த கடையடைப்பை மேற்கொண்டிருந்தனர்.

உ. பி. சட்டசபை உறுப்பினர் இருவர் உட்பட 24 பேர்கள்வரை கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்கள் 144 தடையுத்தரவை மீறியதே காரணம் என்றும் கூறப்படுகிறது.

புதிய உத்தரவின்படி ஏற்பட்டுள்ள நிலைகளை சர்க்காருடன் நேரடியாக விவாதித்து முடிவு செய்து கொள்வது என்று, வர்த்தக சங்கத்தினர் முடிவெடுத்திருக்கின்றனராம்.

இந்த ஒரு வாரகால கடையடைப்பின் விளைவாக, மக்கள், பெரும் தொல்லைகளுக்கு ஆளாக நேரிட்டது என்றும், மருந்துக் கடைகள், முடிவெட்டும் நிலையங்கள் தவிர, வேறு காய்கறிக் கடைகள், மளிகை, துணி முதலிய கடைகள் எல்லாம் தொடர்ந்தாற்போல ஒரு வாரம் மூடப்பட்டிருந்ததால், இன்று கடைகள் திறந்தபோது, பல இடங்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி சாமான்கள் வாங்கவேண்டியிருந்தது என்றும் கூறப்படுகிறது.

சென்னை மேல் சபைக்கு மூவர் நியமனம்

சென்னை கவனர் பிரகாசா, மேல் (சட்ட) சபைக்கு, டாக்டர் எம். ஆர். குருசாமி (முதலியார்), நாமக்கல் ராமலிங்கம் (பிள்ளை), திருமதி ஜோதி வெங்கடாசலம் ஆகியோரை நியமித்திருக்கிறார்.

சிக்கிம், கச், ஆந்திரா, திரிபுரா, மணிப்பூர் ஆகிய இடங்களில், பாதை அபிவிருத்தி வேலைகளுக்காக இந்திய சர்க்கார் ரூ. 25,71,100 வழங்கியுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—6/56

உறுப்பினர் சேர்த்தல்

காலம் நீடிக்கப்படுகிறது

பல கிளைக் கழகங்களிலிருந்து உறுப்பினர் சேர்த்த தாள்கள், தலைமை நிலையத்துக்கு வந்து சேருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை முன்னிட்டும், மேலும் சில ஊர்களில் உறுப்பினர் சேர்க்கும் பணி இன்னும் முடிவுறாததாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் **மே 15-ந் தேதி வரையில் நீடிக்கப்படுகிறது.**

எனவே 15—5—56-ம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக் கொண்டு, உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்,'
சென்னை—13
10-4-1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நாகர் தலைவரைப் பிடித்துத் தருவோருக்கு பெரும் தொகை பரிசு!

பிஜோவைக் கைதுசெய்ய போலீசும், இராணுவமும் தீவிர முயற்சி செய்கிறதாம்

நாகர் தலைவரான பிஜோவைக் கைது செய்துவிட ஆட்சியாளர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

அவரைக் கைது செய்வோருக்கு ஒரு பெருந் தொகை பரிசாகத் தரப்படும் என்று வேறு, அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவமும் போலீசும், வலை போட்டு அரித்து வருகின்றனர்—தீவிர நாகர்களின் தலைவரான பிஜோவைக் கைது செய்துவிட! ஆனாலும் முடியவில்லையாம்.

பிஜோவின் வேடங்கள், அவரைக் கண்டுபிடிக்க முடியாதவாறு செய்து விட்டனவாம்.

பிஜோவுக்குப் பல பெயர்கள் வேறு உண்டாம்; அதனால் அவரை அடையாளம் காணுவதே கடினமாயிருக்கிறதாம்; விடுதலை கோரும் பிஜோவைப் பிடிக்க எண்ணும் ஆட்சியாளர் இந்த தகவலைத் தருகின்றனர்.

வைர — செப்புச் சுரங்கங்கள்

சர்க்கார் தேசியமயமாக்குகிறது!

விந்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள பன்னா வைரச் சுரங்கத்தையும், இராஜஸ்தானில் உள்ள செப்புச் சுரங்கம் ஒன்றையும், தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து சர்க்காரே வாங்கி நடத்த முடிவு செய்திருப்பதாக இயற்கை வள இலாகா மந்திரி கே. டி. மாளவியா, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

பன்னா வைரச் சுரங்க நிர்வாகத்தில், தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும் பங்கு பெறுமாறு ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் கூறினாராம்.

பாங்கி ஊழியர் 'அப்பீல்'

இந்திய உயர்நீதிமன்றம் அனுமதி

புதுடில்லி, ஏப். 9—

தொழிலாளர் அப்பீல் மன்றம், தங்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நிராகரித்ததை எதிர்த்து, அப்பீல் செய்துகொள்ள 'பஞ்சாப் நேஷனல் பாங்கி'யின் முன்னாள் சிப்பந்திகள் 14 பேருக்கு இந்திய உயர்நீதி மன்றம் (சுப்ரீம் கோர்ட்) விசேட அனுமதியளித்துள்ளது.

மொத்தம் 150 சிப்பந்திகளில் 136 பேரை மட்டும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள தொழிலாளர் அப்பீல் மன்றம் தீர்ப்பளித்தது. 14 பேருக்கு நஷ்ட ஈடு தரவும் அது உத்தரவிட்டது.

புதிய கேரள மாநில எல்லைகள் பற்றிய முடிவு

திருவனந்தபுரம், ஏப். 9—

புதிய கேரள மாநிலத்தின் எல்லைகள் சம்பந்தமாக இந்திய சர்க்கார் செய்த முடிவையே இறுதியானதாக ஒப்புக்கொள்வதாக திரு-கொச்சி சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை இல்லாததால், உத்தியோகபூர்வமான மாநிலச் சீரமைப்புக் குழு, மசோதாவின் பரிசீலனையை ஆராய்ந்து முடிவெடுத்துள்ளது.

சென்னை சர்க்காரைக் கலந்து கொள்ளாமல், தேவஸ்தான போர்டுக்கு எவ்வளவு பணம் தர வேண்டுமென முடிவுசெய்வதற்கில்லை என, குழு கருத்தறிவித்துள்ளது.

நிபுணர் குழு சிபாரிசு

மத்திய சர்க்கார் ஏற்கும்?

சென்னை, ஏப். 9—

சென்னை செங்கல்வராயன் தொழில் நுட்பப் பள்ளியில் (சி என். டி. இன்ஸ்டிடியூட்) 'டிப்ளமா' வகுப்புகள் பரவலுக்காக ரூ. 8 இலட்சம் வரை தரப்பட வேண்டுமென, அ. இ. தொழில் நுட்பக் கல்விக் கவுன்சிலின் தென் பிராந்தியக் குழு நியமித்த நிபுணர் குழு சிபாரிசு செய்துள்ளது.

2,000 மாணவர்கள் வாசிக்கும் இப்பள்ளிக்கென ஒரு விடுதி (ஹாஸ்டல்) கட்டுவதற்கு ரூ. 2½ இலட்சம் வட்டியில்லாக் கடனாகத் தரப்பட வேண்டுமெனவும் குழு சிபாரிசு செய்துள்ளது.

ஆச்சரியந்தான்!

மக்கள் சபைக்கு திருவள்ளூர் தொகுதியில் நடைபெற்ற உபத் தேர்தலில், அமைந்தகரைக்கு அருகிலுள்ள நடுவங்கரை பிர்க்காவில், மொத்தமுள்ள 1,200 வாக்காளர்களில் இருவர் மட்டுமே வாக்களித்தனராம்.

படிப்பக வளர்ச்சி நிதிக்காக

'துளி விஷம்'

பம்மல் தமிழர் மன்ற இலவச படிப்பக வளர்ச்சி நிதிக்காக, கே. ஆர். இராமசாமி முதலியோர் நடித்த 'துளி விஷம்' எனும் படக்காட்சி, 13—4—56 காலை 10 மணியளவில் பல்லாவரம் ஜனதா டாக்கீசில் நடைபெறும்.

தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் தலைமை வகிப்பார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் சொற்பொழிவாற்றுவார். நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமியும் கலந்துகொள்வார்.

பாராட்டுக் கூட்டம்

12—4—56 மாலை 6 மணியளவில், ஆம்பூர் — சாணாங்குப்பம் பகுத்தறிவு படிப்பகத்தின் சார்பில், மாணிக்கம் மைதானத்தில், ஆம்பூர் நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் எம். நடேசன் அவர்களைப் பாராட்ட, தோழர் எம். பி. வடிவேலு தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, மா. முருகேசன் பாராட்டுரை வழங்குவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

12—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முத்தமிழ் கழகப் பணிமனையில் (எண் 10, லாயர் சின்னத்தம்பி முதலி தெரு) தோழர் ம. டில்லி தலைமையில் 'அழகு' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

நீத்தார் நினைவு நாள்

சென்னை—சூளை தி. மு. கழகத் தோழர் சு. பாலன் அவர்களின் தந்தையார் டி. சுப்பிரமணியம் இயற்கை எய்தியதின் நினைவு நாள் 11—4—56 மாலை 6 மணிக்கு, கலியாணமேஸ்திரி தோட்டம் (திரு வி. க. திடல் எதிரில்) எண் 81 இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் கா. அப்பாதுரை, இளம்பரிதி, தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் பேசுவர். மாலை 7 மணியளவில், பாலு குழுவினர் இன்னிசை நடைபெறும். இரவு 9 மணிக்கு தோழர் பி. கே. பரமானந்தம் அவர்களால் 'சமூகம் திருந்துமா?' என்ற காலட்சேபம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.